MC No.07/2022
RW-1 சின்னசாமி
(10.10.2025)
மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை
**(மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் ஆஜர்.)**

எனக்கும், மனுதாரருக்கும் கடந்த 25.02.2021 ம் தேதி சௌடார்பட்டி அருகில் உள்ள பொண்ணம்பட்டியில் வைத்து திருமணம் நடைபெற்றது. எங்களது திருமணம் நிச்சயிக்கப்பட்ட திருமணம் தான்., இரு வீட்டாரின் சமதத்தின் பேரில் திருமணம் நடைப்பெற்றது. எனக்கு திருமணத்திற்கு பிறகு எனக்கு சொந்தமான சர்வே எண்.11/11பி2 என்ற வீட்டுமனையிடத்தில் ஏற்கனவே கட்டி இருந்த வீட்டில் தான் எங்களது திருமண வாழ்க்கை ஆரம்பித்தது. எனக்கு அந்த சமயத்தில் நான் ரிலையன்ஸ் நிறுவனத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு சம்பளம் மாதம் 50,000/- சம்பளத்தில் மேற்படி நிறுவனத்தில் மேனேஜோராக இருந்தேன். தொழிலாளர்கான அடையாள அட்டை கொடுக்கப்பட்டது. அதனை நான் நீதிமன்றத்தில் கேட்கவில்லை அதனால் நான் தாக்கல் செய்யவில்லை. கடந்த 01.07.2015 ம் தேதி நான் வேலையில் சேர்ந்துவிட்டேன் என்றால் சரிதான். நான் தொடர்ந்து வேலையிலிருந்து 15.07.2024 ம் தேதி வரை வேலை பார்த்து மேற்படி வேலையை நான் ராஜீனாமா செய்துள்ளேன். அந்த சமயத்தில் என்னுடைய வருட சம்பளம் ரூ.8,33,832 /- ஆகும். என்னை மேற்படி நிறுவனம் வேலையைவிட்டு நீக்கவில்லை நானாக தான் வேலையை ராஜீனாமா செய்துவிட்டேன் என்றால் என்னுடைய வயது 40 வயதை தாண்டியுள்ளதால் நிறுவனத்திலிருந்து பணி நீடிப்பு உத்தரவு வரவில்லை என்பதால் நான் என்னுடைய வேலையை ராஜீனாமா செய்துவிட்டேன் என்றால் சரிதான். எனக்கு அதிகாரபூர்வமாக நிறுவனத்திலிருந்து எந்தவொறு கடிதமும் வரவில்லை என்றாலும் அதனை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு மின்னஞ்சல் மூலம் தகவல் வந்தததது. அந்த மின்னஞ்சல் தகவலை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை என்றாலும் சரியல்ல. எ.ம.சா.ஆ.1 உண்மைக்கு புறம்பானது என்றும், மோசடியானது என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் நான் எந்த நிறுவனத்தில் நான் வேலை பார்த்தேன் என்று சொல்லப்படவில்லை என்றால் JC Contruction மதுரை-2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி JC Construction விலாசம் என்னவென்றால் எனக்கு அது தற்போது ஞாபகம் இல்லை. 15.05.2024 ம் தேதியன்று வேலையிலிருந்து ராஜினாமா செய்த மறுநாளே வேறொரு தனியார்

நிறுவனத்தில் மாதம் ரூ.70,000/- நிர்ணயிக்கப்பட்டு நான் அங்கு வேலைக்கு சேர்ந்துள்ளேன். நான் தற்போது பணியில் இல்லாமல் வீட்டில் இருக்கவில்லை என்றால் நான் தற்போது வரை வேலை எதுவும் பார்க்கவில்லை. எனது மனைவியான இவ்வழக்கின் மனுதாரருக்கு ஜீவனாம்சம் எதுவும் தரக்கூடாது என்பதற்காக எ.ம.சா.ஆ.1 ஆவணத்தை பொய்யாக தயார் செய்துள்ளேன் என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு 25.02.2021 ம் தேதிய திருணமத்திற்கு 10 நாட்களுக்கு முன்பே எனது மனைவியின் 15 பவண் நகைகளை எங்களது குடும்ப கடனை அடைப்பதற்காக கேட்டீர்கள் என்று சொன்னால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அவர்களின் உத்தரவு பேரில் எனது வீட்டிற்கு வந்து மேற்படி நகைகளையும், பொருட்களையும் எடுத்து சென்றுவிட்டார்கள். திருமண முடிந்த நாளியிலிருந்தே எனது அப்பா, அம்மாவிற்கும், எனது அண்ணன், அண்ணன் மனைவிற்கும் பணிவிடை செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு எனது மனைவி 15 பவுண் நகைகளை திருப்பி கேட்டார்கள் என்று சொன்னால் சரிதான். என்னுடைய அம்மா, அப்பாவிற்கும், எனது அண்ணன், அண்ணன் மனைவிற்கும் பணிவிடை செய்ய சொன்னதாலும், 15 பவுண் நககைளை திருப்பி கேட்டதாலும் எனக்கும், எனது மனைவிற்கும் இடையே அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டுவந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த சமயத்தில் என்னுடைய மனைவி கற்பமாகிவிட்டார் என்று சொன்னால் சரிதான். அவருடைய குழந்தை குறைமாத பிரசவத்தில் இறந்து போனது என்றால் சரிதான். இந்த சூழ்நிலையில் எனக்கும், எனது அண்ணன் மனைவிற்கும் இடையே தகாத உறவுகள் நடந்ததற்காக சந்தேகம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் காலையில் 08.00 மணியளவில் வேலைக்கு செல்வேன் என்றால் சரிதான். திரும்ப இரவு 08.00 மணியளவில் வீட்டிற்கு வந்துவிடுவேன். 05.03.2022 ம் தேதி அன்றைய இரவு 10.00 மணியளவில் நானும், எனது மனைவியும் தனிமையில் சந்தித்தை என்னுடைய மனைவி பார்த்துவிட்டார் என்றால் இல்லை. அதில் ஏற்பட்ட தகராறில் மனுதாரை நானும், எனது அப்பாவும், எனது அண்ணன், அண்ணன் மனைவி சேர்ந்து அடித்து மிரட்டல் விடுத்ததால் அன்று இரவு தப்பித்து தனது பெற்றோரை அழைத்து வீட்டிற்கு சென்று விட்டார். மறுநாள் என்மீது என் மனைவி விருதுநகர் காவல் கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்தார். மேற்படி மனுவின் பேரில் அருப்புக் கோட்டை அணைத்து மகளிர் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் வரதட்சணை கொடுமையின் பேரில் விசாரித்தார்கள் என்றால் அவ்வாறு விசாரிக்கவில்லை. மேற்படி காவல்

நிலையத்தில் மனுதாரருக்கு சொந்தமான நகைகளை மனுதாரர் விவகாரத்து சம்மதம் தெரிவித்தால் நீதிமன்றத்தில் வைத்து நான் கொடுத்துவிடுவதாக எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் அதன் பிறகு விவாகரத்து கோரி HMOP No.156/2022 என்ற நம்பரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது மனைவி என்னையும், எனது குடும்பாத்தாரையும் தகாத வார்த்தைகளால் பேசியதால் மேற்படி வழக்கு தொடுக்கப்பட்டது. விவாகரத்து வழக்கு போட்டதால் இந்த ஜீவனாம்ச வழக்கை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றால் மனுதாரர் அவருடைய பொருட்கள் எல்லாத்தையும் எடுத்து சென்றுவிட்டார் அதனால் எனக்கு அவமானம் ஏற்பட்டது. அதனால் தான் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தேன். மனுதாரர் அவருடைய நகைகளை தவிர சீதனப்பொருட்களை மட்டும் எடுத்து சென்றுவிட்டாரா என்றால் இல்லை. எனது மனைவியை நான் கணவர் என்ற முறையில்பராமரிக்க வேண்டிய கடமை உள்ளது என்றாலும், நான் திடகரத்தமாக உள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தற்போது நான் பெரிய நிறுவனத்தில் அதிக சம்பளத்தில் தான் வேலை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு எந்தவிதமான வேலையும் இல்லை எந்தவிதமான வருமானமும் இல்லை என்றால் சரியல்ல. எனவே நான் எனது மனைவியான மனுதாரருக்கு ஜீவனாம்ச கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.